அப்பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு காவேரியிலிருந்து குழாய் மூலம் கொண்டு வரும் திட்டத்தின்கீழ் பம்பின் மெயின் இழுத்து தண்ணீர் சப்ளை செய்வதற்கு பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் பொதுமக்களிடமிருந்து நன்கொடை மூலம் தொகை வசூல் செய்து பார்வதிபுரம் பகுதிக்கு குடிதண்ணீர் சப்ளை செய்யவும் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு வரப்படுகிறது என்றும் திருச்சி மாவட்ட ஆட்சியாளருக்கு முசிறி பேரூராட்சி நிர்வாக அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, முசிறி நகரத்தி லுள்ள பார்வதிபுரம் நகர பஞ்சாயத்திற்கும் சம்பந்தப்பட்டதுதான். குடிநீர் திட்டத்தை நிறைவேற்றுகின்ற நேரத்தில் ஏன் இந்தப் பகுதி சேர்க்கப்பட வில்லை. இனிமேலாவது சேர்ப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா? பண வசதியில்லையென்றால் கடனுகவாவது கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வீடுகளுக்கு மட்டும் அவர்கள் தண்ணீர்க்குழாய் பொருத்திக் கொள்ள விரும்பினால் அதற்காக நன்கொடை வழங்க வேண்டுமென்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, அதைப்போலவே பார்வதி புரத்திற்கும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவர்களுக்கு இணைப்பு கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது. இணைப்பு கொடுக்கப்படும்.

ஆலயங்களில் சமுதாயப் பணிகள்.

* 429 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் உள்ள கோவில்களில் அதிக வருமானம் உள்ள கோவில் எது?

(இ) மேற்படி கோவிலிலிருந்து சமுதாயப் பணிக்கு ஆண்டு தோறும் எவ்வளவு செலவிடப்படுகிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:

(அ) மதுரை மாவட்டம், பழனி, அருள்திரு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில்.

(இ) மேற்படி திருக்கோயிலிலிருந்து சமுதாயப் பணிக்காக 1970–71, 1971–72, மற்றும் 1972–73 ஆண்டுகளில் முறையே ரூ. 10,61,535, ரூ. 13,27,199 மற்றும் ரூ. 13,39,278 செலவிடப்பட்டுள்ளது.

1974 மார்ச் 14]

திரு. டெ. சௌந்தரபாண்டியன் : பழனி கோயில் நிதியிலிருந்து எந்தெந்த சமுதாயப்பணிகள் நிறைவேற்றப்படுகின்றன என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, 17 வகையான சமுதாயப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. பெண்கள் கல்லூரி, சமய வளர்ச்சி சொற்பொழிவுகள், கீழ்த்திசை பண்பாட்டுக் கல்லூரி, கலைக் கல்லூரி (ஆண்கள்), நாதஸ்வரக் கல்லூரி, செந்தமிழ் கல்லூரி, ஏழை விடுதி, ஏழை மாணவர் மதிய உணவு, நூல் நிலையம், வேத ஆகமப்பள்ளி, கோசாலா, சித்த வைத்திய சாலை, பிச்சைக்காரர்கள் மறு வாழ்வுநிதி, கார்த்திக் பள்ளி, மருத்துவமனை, செவிடர்பள்ளி, குழந்தைகள், முதியோர்கள் காப்பகங்கள் என்ற வகையில் செலவிடப்படுகின்றன.

* 430 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கோவில்களில், ஏழைக் குழந்தைகளுக்கு பால் வழங்கும் திட்டம் ஏதேனும் செயல்படுத்தப்பட்டு வருகிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :

(அ) ஆம்.

(இ) தமிழ் புத்தாண்டு தினத்திலிருந்து (13—4—1973) மூன்று வயதிற்குட்பட்ட ஏழைக் குழந்தைகளுக்கு தினசரி தலா 200 மில்லி லிட்டர் பால் ஒவ்வொரு திருக்கோயிலின் நிதி வசதிக்குட்பட்டு வழங்க ஏற்பாடாகி, அதன்பேரில் 64 திருக்கோயில்களிலிருந்து 648 குழந்தைகளுக்கு இத்திட்டப்படி இலவசமாக பால் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் 31—12—1973 முடிய 11 திருக்கோயில்களில் 147 குழந்தைகளுக்கு இலவசமாக தினசரி தலா 200 மில்லி லிட்டர் பால் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இத்திட்டம் அனுமதிக்கப்பட்ட எஞ்சியுள்ள 53 திருக்கோயில்களில் இத்திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுககப்பட்டு வருகிறது. மதுரை அருள்திரு மீனுட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் இத்திட்டத்தின்கீழ் தினசரி பால் கொடுப்பது தவிர, ஆண்டுதோறும் மார்கழித் திங்களில் 7 லிட்டர் பால் திருக்கோயில் செலவிலும், 15 லிட்டர் பால் அன்பளிப்பாகப் பெற்றும் (தினசரி 22 லிட்டர் பால்) ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கும் திட்டமும் நடைமுறையில் இருந்து வருகிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கொடுத்த கணக்கிலிருந்து தலா பத்து குழந்தைகள்தான் வருகின்றன, பால் வழங்கப்படும் குழந்தைகள். பழனி கோயிலைப் பற்றிச் சொன்னுர்கள். அதிகமான வருமானம் வரும் கோயில்களில் இந்தத் திட்டத்தின்படி அதிகமான குழந்தைகளுக்கு வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?